## DEPOSITION OF WITNESS

**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.94/2026**
**Sessions :**
**Deposition of Witness for :PW6 , LW17**

| | |
|---|---|
| Name | திரு.பாலமுருகன் |
| Father's/Husband Name | திரு.சுப்பராயன் |
| Village | |
| Taluk | |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 02nd day of July, 2026**

மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள். 9 வது எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. U/s.355 of BNSS மனு தாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது சித்தாமூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரிகளான ராஜேந்திரன் மற்றும் வெங்கடேசன் காவல் உதவி ஆய்வாளர்கள் என்பவர்களின் கையெழுத்தும் விசாரணை நடைமுறையும் நன்றாக தெரியும் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 30.05.2019 ம் தேதி காலை 10.00 மணிக்கு மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் நிலைய பெறுப்பில் இருந்தபோது மதுராந்தகம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்

பேரில் அங்கு சென்று பூங்காவனம், க/பெ.பெருமாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.79/2019 ல் இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 506(2)ன் r/w 4 of TNPHW Act கீழ் வழக்குபதிவு செய்தார். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கமல் மற்றும் வேல்முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வை இட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **(அந்த பார்வை மகசர் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 12 வரையான மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான கமல் மற்றும் வேல்முருகன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களான பரமசிவம் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **மேற்படி பரமசிவத்திற்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேலும் இவ்வழக்கில் காயம்பட்ட பூசம்மாள், சின்னதுரை, பூங்காவனம் ஆகியோர்களுக்கு விபத்து பதிவேடு மற்றும் காயத்தன்மை குறித்து சான்று வழங்கிய மருத்துவர் லட்சுமி பிரியா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். **(காயம்பட்ட சின்னதுரைக்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடு**

**அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி அவருக்கு வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது) . (மேற்படி காயம்பட்ட பூங்காவனத்திற்கு காயத்தன்மை குறித்த சான்றிதழ் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)(மேற்படி காயம்பட்ட பூசம்மாளுக்கு காயத்தன்மை குறித்த சான்றிதழ் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (மேற்படி பரமசிவம் என்பவருக்கு காயத்தின் தன்மை கொடுங்காயம் என்பதால் இவ்வழக்கின் சட்ட பிரிவுகளை இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 506(2)ன் r/w 4 of TNPHW Act @ 147, 148, 294(பி), 323, 326, 506(2)ன் r/w 4 of TNPHW Act கீழ் பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தார். **(அந்த பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கின் எதிரி கங்காபவானி சென்னை உயர்நீதிமன்றத்தில் முன் பிணையும், மற்ற எதிரிகள் அனைவரும் காஞ்சிபுரம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணையும் பெற்று சென்றுவிட்டார்கள். வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது 23.03.2020 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

5. நான் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி இல்லை என்றாலும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி தவறான புகாரை பெற்று சம்பவம் இடம் செல்லாமல், சாட்சிகளை சரிவர விசாரிக்காமல், தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு  விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது)**
**மறு விசாரணை...இல்லை**

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif  Cum Judicial Magistrate
Cheyyur.